[22nd September 1956

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. There was a deputation and representations were also made. The Revenue Minister also attended one conference there. He is aware of all the difficulties arising on account of this seepage of water.

SRI S. RAMALINGAM : லோயர் பவானி சாகர் திட்டத்தில் புஞ்சை தானியத்தை பிரத்யேகமாகப் பயிரிட வேண்டுமென்று நடைமுறையில் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டம் சரிவர நடைபெற முடியவில்லை. அதனால் அங்குள்ள ரயத்துக்கள் அதை மாற்றி அமைக்க முற்படுகிறார்கள். அதனால் அந்த பிராஜெக்ட் ஏரியாவில் நஞ்சை புஞ்சை முறையில் நிலங்களை உபயோகப்படுத்துவதற்கு அனுமதி அளிக்க சர்க்கார் யோசனை செய்து அதற்கு வேண்டிய வசதி அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த திட்டம் ஒரு முக்கியமான திட்டம் என்று கருதப்படுகிறது. அதன் காரணமாக அங்கு ஏராளமான பருத்தி சாகுபடி செய்யமுடியும். அங்கு பருத்தி சாகுபடி செய்யப்பட வேண்டுமென்று தான் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அங்கு இரண்டு லட்சத்து எட்டு ஆயிரம் ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்கு லாயக்கு உள்ளதாக இருக்கின்றன. அதனால்தான் அங்கு புஞ்சை சாகுபடி செய்யவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் அங்கு நெல் சாகுபடி செய்யவேண்டுமென்றால் அந்த நோக்கம் போய்விடும். அங்கு இருக்கும் நிலைமையைப் பார்த்தால் கொஞ்சம் அதிக நெல் சாகுபடிக்கு ஏற்பாடு செய்யவேண்டும்போல் இருக்கிறது.

SRI K. R. NALLASIVAM : கனம் மந்திரி அவர்கள் அங்குள்ள திட்டத்தை பற்றி குறிப்பிட்டார். அங்குள்ள அடங்கல் கணக்கைப் பார்த்தால் அங்கே நஞ்சை சாகுபடிக்குத்தான் தீர்வை விதிக்கப்பட்டுவருவது தெரியும். நெல் விளைவிக்காமல் இருக்கும்போது அங்கு நஞ்சைத் தீர்வை விதிக்கப்படுவதால் விவசாயிகள் பல கஷ்டங்களுக்குள்ளாகி இருக்கிறார் கள். அதை விசாரிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து இதைப்பற்றி விசாரித்து ஒரு முடிவுக்கு வரும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அங்கு அக்கிரமமாக நெல் பயிர் செய்தால் அதற்கு தண்டத் தீர்வையும் விதிக்கிறார்கள். அப்படிப் போட்டு விட்டு பிற்பட்டு அநேகமாக அதையும் ரத்து செய்து விடுகிறார்கள். ஜமாபந்தி காலங்களில் ரயத்துக்கள் மனுச் செய்து கொண்டாலும் சரி மனுச் செய்துகொள்ளா விட்டாலும் சரி அப்படி போடப்பட்ட தீர்வையை ரத்து செய்துவிடுகிறார்கள். இதற்கு ஒரு தனி கமிட்டி நியமித்து அதைப் பரி சீலனை செய்யவேண்டும் என்பது அவசியம் இல்லை. இதைப்பற்றியெல்லாம் அநேக மனுக்கள் வந்துகொண்டிருக்கின்றன. அந்த மனுக்களை பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

* 172 *Q.*—SRI K. R. NALLASIVAM (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have reduced the penalty imposed on the ryots in the Lower Bhavani Project Area during 1956 for the unauthorized cultivation of paddy in the area ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Representations have been received from the ryots under the Lower Bhavani Project, requesting the reduction of penalty imposed for unauthorized paddy cultivation in that area and the matter is under the consideration of the Government.

22nd September 1956]

Sri K. T. RAJU : கனம் சபாநாயகர் அவர்களே, தண்டத் தீர்வை முதலில் போட்டாலும் அதை மறுபடியும் ரத்து செய்யப்படும் என்று கனம் மந்திரி அவர்கள் முதல் கேள்வியில் பதில் சொன்னார். சுமார் 750 விண்ணப்பங்கள் இது வரையிலும் வந்திருக்கலாம். அவைகளில் நான்கு விண்ணப்பங்களுக்குக்கூட ரத்து பண்ணியதாக இது வரைக்கும் உத்தரவு வரவில்லை. நிலைமை இப்படி இருக்கும்போது விவசாயிகளுக்கு முதலில் தண்டத் தீர்வையைப் போட்டுவிட்டு பிற்பாடு அதை ரத்து செய்வானேன் என்று கேட்கிறேன். அதற்குப்பதிலாக அவர்களுக்கு முதலிலேயே தண்டத் தீர்வையை போடாமல் இருந்தால் நல்லது அல்லவா ? இப்படிப் பட்ட கஷ்டங்களை விவசாயிகளுக்கு அளிக்கவேண்டிய அவசியம் என்ன ? ஆரம்பத்திலேயே சர்க்கார் இதைப்பற்றி ஒரு முடிவு செய்து அதற்குத் தக்கபடி ஒரு உத்தரவு போடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : தண்டத் தீர்வை விஷயமாக அதை ரத்து செய்யவேண்டுமானால் அதற்கு மனுச் செய்துகொள்ளவேண்டும் என்று ஏற்கெனவே உத்தரவு இருந்தது. இப்பொழுது அப்படி இல்லை. மனு இல்லாமலேயே அதாவது உத்யோகஸ்தர்கள் suo motu அவர்களாகவே அதைப்பற்றி பரிசிலனை செய்து ரத்து செய்யவேண்டுமென்று ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகவே எவ்வளவுக்கெவ்வளவு விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களை நிவர்த்தி செய்து வைக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு சர்க்கார் வழி செய்துகொண்டு தான் வருகிறார்கள்.

*** 173 *Q*.—Sri K. R. NALLASIVAM (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to go into the question of water levy on the ayacutdars of the Lower Bhavani Project area in Coimbatore district ?**

The Hon. Sri M. A. MANICKAVELU : The hon. Member presumably refers to levy of water-cess. The levy of water-cess under this Project is governed by rules already issued in this behalf. Some petitions have been received by Government urging revision of the rates prescribed in the rules. They are under consideration.

Sri K. R. NALLASIVAM : அணை திட்டத்தில் இருக்கக்கூடிய நிலங்களுக்கு சொல்ப தண்ணீர்தான் விடுகிறார்கள். அவர்களுக்கு அதிகப்படியான தீர்வை விதிக்கிறார்கள் ஆனால் அதிகப்படியாக தண்ணீர்விடக்கூடிய பிரதேசங்களுக்கு இவ்வளவு அதிகமாக தீர்வை விதிப்பதாகத் தெரியவில்லை ; 18 தடவை தண்ணீர் விடக்கூடிய இந்த பாசனத்துக்கு அதிகப்படியாக தீர்வை விதிக்கிறார்கள். ஆனால் வருஷத்தில் சுமார் 300 நாட்கள் தண்ணீர் விடக்கூடிய பிரதேசங்களுக்கு அப்படிப்பட்ட தீர்வை விதிப்பதில்லை, அதனால் தண்ணீர் விடுவதைப் பொறுத்து தீர்வை விதிக்கிறார்களா அல்லது ப்ராஜெக்ட்டின் செலவைப் பொறுத்து தீர்வை விதிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதிகப்படியாக தண்ணீர் விடக்கூடிய இடத்திற்கு அதிகப்படியாக தீர்வையும் விதிப்பதாகத் தெரிய வருகிறது. எந்த அடிப்படையில் தீர்வை விதிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : நெல், கரும்பு மற்ற தான்யங்கள் என்பதைப் பொறுத்துத்தான் இப்பொழுது தீர்வை விதிக்கப்படுகிறது. இதைப்பற்றி பரிசிலனை செய்ய பல மனுக்கள் வந்திருக்கின்றன. அவைகளை பைசல் செய்வது என்பது கஷ்டமாக இருக்கிறது. அதில் பல தொந்தரவுகள் ஏற்படுகின்றன. அதை மாற்றி யமைக்கவேண்டும் என்று யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது சாகுபடியை மூன்று இனங்களாக பிரித்து வைத்திருக்கிறார்கள். ஒன்று நெல் சாகுபடி,